**செய்தி வெளியீடு எண்: 619** **நாள்:27.08.2020**

**<u>இன்று (27.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

உலகளவில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த அரசால் முழுமூச்சில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரை, தனிக் கவனம் செலுத்தப்பட்டு, இந்நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சையளித்து அவர்களை குணமடையச் செய்யும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான படுக்கை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. போதிய மருத்துவ பரிசோதனை உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்நோய் தொற்றுக்கு மருத்துவர்கள் சரியான முறையில் சிகிச்சையளிக்கும் காரணத்தாலும், இந்தியாவில், அதிக பரிசோதனைகள் செய்கின்ற முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாலும், இந்நோய்த் தொற்று பரவல் குறைக்கப்பட்டு நாட்டிலேயே, தமிழ்நாட்டில்தான் குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகமாகவும், இறப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது.

கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு நாள்தோறும் சுமார் 350 காய்ச்சல் முகாம்கள் நடைபெறுகின்றன. கடலூர் மாவட்டத்தில் இதுவரை 8,075 காய்ச்சல் முகாம்கள் நடைபெற்றுள்ளன. இம்முகாம்களின் மூலம் 3,25,576 நபர்கள் பங்கு பெற்று, 2,380 நபர்களுக்கு நோய்த்தொற்று கண்டறியப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு காய்ச்சல் முகாம்கள் பேருதவியாக இருக்கின்றது. அதை அரசு தமிழகத்தில் உரிய முறையில் செயல்படுத்தி வருகின்றது. 31 கோவிட் கேர் மையங்களில் 3,500 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 37 இடங்கள் கண்டறியப்பட்டு 5,000 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. கடலூர் மாவட்டத்தில், அதிகமான நோய் தொற்று ஏற்படுள்ள பகுதிகளுக்கு 39

நடமாடும் மருத்துவமனைகள் நேரில் சென்று பரிசோதித்து, நோய் தொற்று உள்ளவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இது ஒரு புதிய நோய் தொற்றாக இருப்பதால் இதற்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தாலும், மருத்துவர்களின் திறமையால் நோய்த் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சரியான முறையில் சிகிச்சையளித்து குணமடைந்து வருகிறார்கள். எனவே மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், மருத்துவ பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த, உளமார்ந்த பாராட்டுகளை அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். இந்நோய்ப் பரவலைத் தடுக்க, கடலூர் மாவட்டத்திற்கு ரூபாய் 6.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் அரசை நாடிச் செல்வதற்கு பதிலாக அரசே மக்களை நாடிச் சென்று அவர்களுடைய பிரச்சனைகளை தீர்ப்பதுதான் முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தில் பெறப்பட்ட 56,958 மனுக்களில் 38,100 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை 9,965 நபர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா 12,514 நபர்களுக்கும் இம்மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாக குடிமராமத்துத் திட்டம், பசுமை வீடுகள் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஜல்ஜீவன் மிஷன் திட்டம் மூலம் கிராமப்புறங்களில் உள்ள 1,04,521 வீடுகளுக்கு ரூபாய் 84.33 கோடி மதிப்பீட்டில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. சிதம்பரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி மற்றும் பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 கிராம குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பண்ருட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 17 குடியிருப்புகள் மற்றும் அண்ணாகிராமம் ஒன்றியத்திற்குட்பட்ட 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன. திட்டக்குடி, பெண்ணாடகம், மங்கலம்பேட்டை, கங்கைகொண்டான், வடலூர், குறிஞ்சிப்பாடி பேரூராட்சிகள், விருதாச்சலம், நல்லூர்,

மங்களூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 625 குடியிருப்புகளுக்கு ரூபாய் 479 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் உள்ள 12,111 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூபாய் 1,114 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூபாய் 1,687 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூபாய் 215 கோடி கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில், இந்த ஆண்டு 1,554 மகளிருக்கு ரூபாய் 25 ஆயிரம் மானியத்துடன் அம்மா இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் ரூபாய் 2.34 கோடி மானியம் வழங்கப்பட்டு, 8,947 மகளிர் அம்மா இரு சக்கர வாகனங்களை பெற்றுள்ளனர்.

பொதுப்பணித் துறையில், குடிமராமத்துத் திட்டம், தடுப்பணைகள் கட்டும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தில் அதிகளவில் தடுப்பணைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர், குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே ரூபாய் 495 கோடி மதிப்பீட்டில் கதவணை அமைக்கும்பணி நடைபெற்று வருகிறது. இதில், சுமார் 40 சதவிகிதப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதேபோல் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் தடுப்பணைகள் அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, கடலூர் மாவட்டத்தில் ரயில்வே கடவுகளுக்கு குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. கடலூர் நகரத்தில் கீழ்ப்பாலம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வீடுகட்டும் திட்டத்தின் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் பங்களிப்புடன் பரங்கிப்பேட்டை, கடலூர் நகராட்சி, திருவதிகை, காடம்புலியூர், பண்ருட்டி, கீழ்க்குப்பம், பாலக்கொல்லை ஆகிய இடங்களில் வீடுகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கடலூர், சிதம்பரம், பண்ருட்டி, விருத்தாசலம், நெல்லிக்குப்பம் ஆகிய நகராட்சிகளில் ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, சொந்த இடத்தில்

கான்க்ரீட் வீடு கட்டும் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், புதிய தொழிற்சாலைகளை இந்த மாவட்டத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மீன்வளத் துறையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மாவின் அரசு, மீனவர்களுக்கு பல்வேறு வசதிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆபத்து கால எச்சரிக்கை பரப்பும் கருவிகள் 76 மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 2018–2019 ஆம் ஆண்டு 42 படகுகளுக்கு செயற்கைக்கோள் தொலைத்தொடர்பு சாதனம் வழங்கப்பட்டிருக்கிறது. 731 நாட்டு மீனவர்கள் மற்றும் 190 விசைப்படகு மீனவ பயனாளிகளுக்கு கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் துறைமுகம், ரூபாய் 135 கோடி செலவில் ஆழ்கடல் துறைமுகமாக தற்போது மேம்படுத்தப்பட்டு வருகிறது. வணிகக் கப்பல் போக்குவரத்து விரைவில் துவங்கும். மேலும், துறைமுகத்தினை தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தப்படும். பல புறவழிச் சாலைகள் அமைப்பதற்கும் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும், விழுப்புரத்திலிருந்து, கடலூர்–சிதம்பரம் செல்வதற்கு வசதியாக விக்கிரவாண்டி–தஞ்சாவூர்–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலை 45–சி சாலையை தேசிய நெடுஞ்சாலை 45–ஏ–உடன் இணைக்கும் வகையில் தென்பண்ணையாற்றின் கரையோரமாக புதிதாக 7 கிலோ மீட்டர் நீள சாலை அமைக்கப்பட்டு, கடலூர் கஸ்டம்ஸ் சாலையுடன் இணைக்கப்படும். இதற்கிடையே வரும் உள்ளாட்சி அமைப்புகளின் சாலைகள், நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்பட்டு மேம்படுத்தப்படும். இதனால், பயண நேரம் மற்றும் தூரம் குறையும், கடலூர்–சித்தூர் சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும். பண்ருட்டி, பட்டாம்பாக்கம், நெல்லிக்குப்பம் ஆகிய பகுதிகள் மேலும் வளர்ச்சி பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை, கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு எல்லா மாவட்டங்களிலும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்ட நிர்வாகம் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளை மிகச் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அறிவித்த திட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறுகின்ற பொழுது, மக்கள் முழுமையாக பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக அம்மாவின் அரசு, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கியிருக்கிறது. மேலும், பாலிடெக்னிக் கல்லூரிக்கான கட்டடப் பணிகள் முடிவுற்று திறக்கப்படும் நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்து, இதையெல்லாம் மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த மாவட்ட மக்களுக்கு செய்த நன்மைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**